பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 12 2024 **WEDNESDAY** 12 40 **PM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

2. நாட்டின் ஒற்றுமை மற்றும் கலாச்சாரத்திற்கு மொழிகள் அடித்தளமாக திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி கூறியுள்ளார்.

3. கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சிப் பயணம் வெகுசிறப்பாக உள்ளது என்று நித்தி ஆயோக் தெரிவித்துள்ளது.

4. தமிழக அரசின் கான்கிரிட் வீடு கட்டும் திட்டத்திற்கு மேலும் 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. இந்திய கிரிக்கெட் அணியின் ஆல்ரவுண்டர் ரவிச்சந்திரன் அஸ்வின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

>>>>><<<<<

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும், பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி, காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், அவைத்தலைவர் திரு. ஓம் பிர்லா அவை நடவடிக்கைகளை ஒத்தி வைத்தார்.

மாநிலங்களவையிலும் இதேபோன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி காரணமாக அவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் அவையை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைத்தார்.

>>>>><<<<<

மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுவதை தடுக்கவே ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாக மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றிற்கு பேட்டியளித்த அவர், வருங்கால தலைமுறையினரின் நலனுக்காகவே பிரதமர் திரு. நரேந்திர மோடி அடித்தளமிடுவதாக கூறியுள்ளார்.

மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலேயே, அரசியல் சாசன பிரிவு 370 ரத்து, ஒரே நாடு - ஒரே குடும்ப அட்டை, மகளிர் இடஒதுக்கீடு போன்றவை செயல்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு செய்ய வாய்ப்புள்ளது என்ற காங்கிரஸ் கட்சியின் குற்றச்சாட்டு பற்றிய கேள்விக்கு காங்கிரஸ் கூட்டணிக் கட்சியினரே இப்பிரச்சினையை கைவிட்டு விட்டதாக திரு. ஜோதிராதித்ய சிந்தியா பதிலளித்தார்.

>>>>><<<<<

நாட்டின் ஒற்றுமை மற்றும் கலாச்சார வரலாற்றுக்கு மொழிகள் அடித்தளமாக திகழ்வதாக மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் காரணமாகவே கட்டமைப்பு வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, விவசாயம் போன்றவற்றுடன் கலாச்சார வளர்ச்சிக்கும் அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

இந்தியாவில் 121 பிரதான மொழிகள் இருப்பதுடன், பேச்சுவழக்கில் ஆயிரத்து 600 மொழிகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மொழிகள், தகவல் பரிமாற்றத்திற்கான ஊடகமாக மட்டுமின்றி, அறிவு கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் முக்கிய அம்சமாகவும் திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, மக்களுக்கு அதிகாரமளிக்கவும், தனிப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தவும் ஏதுவாக பிரதான மொழிகள் மற்றும் பேச்சுவழக்கில் உள்ள மொழிகளை பேணிப் பாதுகாக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் திரு. கிஷன் ரெட்டி கூறினார்.

>>>>><<<<<

தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையம் இன்று ஆலோசனை மேற்கொண்டுள்ளது.

தற்போதைய தில்லி சட்டப்பேரவையின் பதவிக்காலம் வரும் பிப்ரவரி மாதம் 15ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் இறுதி அல்லது பிப்ரவரி மாத முற்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், தேர்தல் அட்டவணையை அறிவிக்க ஏதுவாக, முன்னேற்பாடுகள் குறித்து புதுதில்லியில் இன்று தேர்தல் ஆணையம் ஆலோசனை மேற்கொண்டுள்ளது.

>>>>><<<<<

கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சிப் பயணம் வெகுசிறப்பாக உள்ளது என்று நித்தி ஆயோக் அமைப்பின் துணைத்தலைவர் திரு. சுமன் கே பெரி கூறியுள்ளார்.

நித்தி ஆயோக் அமைப்பு கலிஃபோர்னியா பல்கலைக் கழகம் மற்றும் இந்திராகாந்தி மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து மும்பையில் இந்தியாவின் பன்முக மாற்றங்கள் குறித்த சர்வதேச பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இதில் தொடக்கவுரையாற்றிய திரு. சுமன் கே. பெரி, 2014-ல் உலகின் பத்தாவது பெரிய பொருளாதார நாடாக இருந்த இந்தியா, உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு விரைவான வளர்ச்சி பெற்று, தற்போது 5வது இடத்திற்கு முன்னேறியிருப்பதை சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

கரக்பூரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம், இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களின் தரவரிசைப் பட்டியலில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளதாக **QS** உலக பல்கலைக் கழக தரவரிசை பட்டியல் 2025ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம், கடந்த ஆண்டில் உலக அளவில் 202-வது இடத்தில் இருந்த நிலையில் தற்போது 147வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆசிய அளவில் 23-வது சிறந்த கல்வி நிறுவனமாகவும் கரக்பூர் ஐ.டி.ஐ இடம்பெற்றுள்ளது.

**>>>>><<<<<**

தமிழக அரசின் கான்கிரிட் வீடு கட்டும் திட்டத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் மேலும் 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இந்த தொகையையும் சேர்த்து, இத்திட்டத்திற்கு மொத்தம் ஆயிரத்து 456 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அனைத்து வீடுகளும் இந்த நிதியாண்டிற்குள் கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, திருச்சியில் உலக தரத்திலான மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்க 290 கோடி ரூபாய் ஒதுக்குவதற்கான நிர்வாக அனுமதி அளித்தும் தமிழக அரசு அரசணை பிறப்பித்துள்ளது.

**>>>>><<<<<**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு திருமலை திருப்பதி தேவஸ்தானம் வழங்கி வந்த விரைவு தரிசன டிக்கெட்களை மீண்டும் வழங்க வேண்டுமென்று ஆந்திர அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன், நெல்லூரில் ஆந்திர மாநில அறநிலையத்துறை அமைச்சர் திரு அன்னம் ராமநாராயண ரெட்டியை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

**>>>>><<<<<**

மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்யும் தொடர் கனமழை காரணமாக, குற்றால அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் 38 செகண்ட்ஸ்)

இதேபோன்று, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர், மடவார்வளாகம் வைத்தியநாத ஸ்வாமி கோவிலுக்குள் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதனால் பக்தர்கள் சிரமத்திற்கு உள்ளானதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் 48 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

தெற்கு பசிபிக் தீவான **Vanuatu**-ல் நேரிட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

ரிக்டர் அளவில் ஏழு புள்ளி மூன்றாக பதிவான இந்த நிலநடுக்கத்தால், 200க்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பலரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதால், உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

அங்கு மீட்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலநடுக்கத்தால், சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா மனிதநேய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

இந்திய கிரிக்கெட் அணியின் ஆல்ரவுண்டர் ரவிச்சந்திரன் அஸ்வின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இதுவரை தாம் விளையாடிய 106 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில், 537 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள அவர், 11 முறை தொடர் நாயகன் விருதை வென்றுள்ளார்.

அஸ்வினின் இந்த அறிவிப்புக்கு பதிலளித்துள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம், அவரது சாதனைகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இந்தியா — ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டிரா ஆனது.

பிரிஸ்பேனில் நடைபெற்ற இப்போட்டியின் ஐந்தாவது நாளான இன்று 275 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இந்தியா விக்கெட் இழப்பின்றி 8 ரன் எடுத்திருந்தபோது மழை காரணமாக ஆட்டத்தை தொடர முடியாத நிலையில், ஆட்டம் டிராவில் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

முன்னதாக, ஆஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸில் ஏழு விக்கெட் இழப்புக்கு 89 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்த்தை டிக்ளர் செய்தது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 445 ரன்.

இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 260 ரன்.

>>>>><<<<<

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தமிழகம் - பெங்கால் அணியையும், பாட்னா — தெலுகு அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>>END<<<<<